**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 151/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. சேர்மகிருஷ்ணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

1 ம் *எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of March 2026.

நான் தற்போது ஏர்வாடி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஏர்வாடி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது 23.03.2014 ம் தேதி காலை 04.00 மணியளவில் நான், எஸ்ஐ சோபனாஜாய், தலைமை காவலர் செந்தில்சுரேஷ் ஆகியோர் மணல் திருட்டு சம்பந்தமாக பெருமளஞ்சி கீழுர் பிள்ளையார் கோவில் அருகே வரும்போது வடக்கிலிருந்து தெற்காக வந்த மகேந்திரா நிஸான் TN 51 Q 5113 வாகனத்தை சோதனை செய்தபோது வண்டியிலிருந்து நான்கு நபர்கள் ஓடினார்கள். அதில் பிரபாகரன் என்பவரை மட்டும் பிடித்துவிசாரித்தோம். எதிரி பிரபாகரன் ஆஜரில் இல்லை. நல்லான்குளம் தங்கவேல் மகன் வேல்குமார், தளபதிசமுத்திரம் பால்பாண்டி மகன் ஜெயபால், இராமகிருஷ்ணபுரம் சேதுபதி மகன் செந்துார் ஆகியோர் ஈடுபட்டதாக எதிரி பிரபாகரன் சொன்னார். வண்டியை பார்வையிட்டபோது வாகனத்தில் 1 யூனிட் மணல் இருந்தது. அதன் மதிப்பு சுமார் ரூ.3000/– ஆகும். அத்தாட்சியில் நான் இரண்டாவதாக கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். அத்தாட்சியை எஸ்ஐ

சோபனாஜாய் தயார் செய்தார். 1வது எதிரி பிரபாகரன் மற்றும் TN 51 Q 5113 வாகனத்தையும் கைப்பற்றி காவல்நிலையத்திற்கு கொண்டுவந்தோம். வழக்கு பதிவுசெய்த காவல்உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவயிடத்தில் மூன்று நபர்கள் தான் ரோந்துபணியில் இருந்தோம் என்றால் கூடுதலாக இரண்டு நபர்கள் இருந்தார்கள். நாங்கள் தனிதனி இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், அ.சா.1ம் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றோம். மற்ற நபர்கள் தனிதனித்தனியாக அவர்களது வாகனத்தில் வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து மகேந்திரா வாகனத்தை நான்தான் ஓட்டிவந்தேன் என்றால் இல்லை, எதிரி பிரபாகரன் ஓட்டிவந்தார், நான் உடன் வந்தேன். சம்பவயிடம் பிள்ளையார்கோவிலுக்கு வடபுறம் அல்லது தென்புறம் என்றால் பிள்யைார்கோவிலுக்கு கிழக்கு பக்க ரோடு. மேற்படி ரோடு கிழமேடு ரோடு என்றால் தென்வட ரோடு. சம்பவயிடத்தில் மூன்று எதிரிகள் எவ்வளவு துாரத்திற்கு ஓடினார்கள் என்றால் 100மீ துாரத்திற்கு ஓடினார்கள். எந்த திசையை பார்த்து ஓடினார்கள் என்றால் வடக்கு பார்த்து ஓடினார்கள். நாங்கள் எதிரி பிரபாகரனை விரட்டிதான் பிடித்தோம் என்றால் சரிதான்.

சம்பவயிடத்தில் 1வது எதிரி பிரபாகரன் வாக்குமூலம் கொடுக்க எஸ்ஐ எழுதினார் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வாகனத்தில் மண் அள்ளுவதற்கான இரும்புசட்டியோ, மண்வெட்டியோ இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல ரோந்து பணிக்கு சென்றது உண்மையில்லை என்றால் சரியல்ல. வாகனத்தை சம்பவயிடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரத்திற்காக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உரிய நடைமுறையில்லாமல் அள்ளிவந்த மணலை தாசில்தாரிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.25 17:42:26 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 151/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. செந்தில்சுரேஷ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

1 ம் *எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of March 2026.

நான் தற்போது இராஜக்கல்மங்கலம் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஏர்வாடி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 23.03.2014 ம் தேதி காலை 05.30 மணியளவில் எஸ்.ஐ சோபனாஜாய் தலைமையில் நானும், தலைமை காவலர் சேர்மதுரை மற்றும் போலீஸார் சகிதம் மணல் அள்ளிகொண்டுபோனது சம்பந்தமாக தளபதிசமுத்திரம் கீழுர்க்கு ரோந்து சென்றபோது தளபதிசமுத்திரம் கீழுரில் ஆற்றில் நான்கு நபர்கள் மணலை மகேந்திரா TN 51 Q 5113 வாகனத்தில் அள்ளிக்கொண்டிருந்தனர். எங்களை பார்த்தவுடன் மூன்று நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர். வாகனத்தில் 1 யூனிட் மணல் இருந்தது. அதன் மதிப்பு சுமார் ரூ.3000/– ஆகும். அவர்களில் பிரபாகரனை மட்டும் நாங்கள் பிடித்தோம். எதிரி பிரபாகரனை பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். மற்ற ஆஜர் எதிரிகள் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியை காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதில் நான் முதலாவதாக கையெப்பம் செய்தேன். மேற்படி கையெப்பம்

**<u>அ.சா.ஆ.1</u>** ஆகும். 1வது எதிரி பிரபாகரன் மற்றும் TN 51 Q 5113 வாகனத்தையும் கைப்பற்றி காவல்நிலையத்திற்கு கொண்டுவந்தோம். வழக்கு பதிவுசெய்த காவல்உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார்கொடுத்து வழக்கு பதிவுசெய்தது காவல் உதவி ஆய்வாளர் சோபனாஜாய் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் ஆறு நபர்கள் சென்றோம். நாங்கள் அனைவரும் காவல்துறை வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லும்போது 3 நபர்கள் எவ்வளவு துூரம் ஓடியிருப்பார்கள் என்றால் 100 மீ துூரம் ஓடியிருப்பார்கள். தளபதிசமுத்திரம் கீழுர் ஆற்றிலிருந்து எந்த திசையில் 3 நபர்கள் ஓடினார்கள் என்றால் வடக்கு திசையை பார்த்து ஓடினார்கள். வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வாகனம் ஆற்றின் எந்த பகத்தில் இருந்தது என்றால் ஆற்றில் உள்ள கரையில் இருந்தது. வாகனத்தின் கலர் என்ன என்றால் ஊதா கலர். ஆற்றில் இருந்த வாகனத்தை காவல்நிலையத்திற்கு யார் ஓட்டிசென்றார் என்றால் வேறு டிரைவர் வைத்து காவல்நிலையத்திற்கு கொண்டுவந்தோம், அவர் யார் என்று தெரியாது.

சேர்மதுரை என்னுடன் எத்தனை வருடம் பணிபுரிந்தார் என்றால் மூன்று வருடம். ஆற்றிலிருந்து மணலை எதை கொண்டு அள்ளிக்கொண்டிருந்தனர் என்றால் மண்வெட்டியால் இரும்புசட்டியில் அள்ளி வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தனர். வண்டியை பிடிக்கும்போது எத்தனை மண்வெட்டிகள், இரும்பு சட்டிகள் இருந்தது என்றால் 3 மண்வெட்டிகள், 3 இரும்பு சட்டிகள் இருந்தது. அத்தாட்சியை யார் எழுதினார் என்றால் காவல்உதவி ஆய்வாளர் சோபனா ஜாய் அவர் கைப்பட அத்தாட்சியை எழுதினார். நான் சொல்வது போல ரோந்து பணிக்கு சென்றதாகவும், மணலோடு உள்ள வண்டியை கைப்பற்றதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேலதிகாரியின் அறிவுறுத்தலின்படி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.25 17:42:39 +0530